# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2329/50 - 2023 අප්‍රේල් මස 28 වැනි සිකුරාදා - 2023.04.28

*2329/50 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் ஊடாக அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினடிப்படையில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகிய நான், குறித்த சபைக்கு, இரத்தினபுரி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் II ஆம் கட்டத்தின் நீர் சேகரிப்பு தாங்கி, உந்தி நிலையம் மற்றும் உத்தியோகபூர்வ விடுதி ஆகியவற்றை நிர்மாணிப்பதன் நிமித்தம் காணிப்பகுதிகளை சுவீகரித்துக் கொள்வதற்காக இலக்கம் : 2224/ 04 மற்றும் 2021.04.19 ஆந் திகதியுடைய வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பிரகடனத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.*

**ஜீவன் தொண்டமான்,**
நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு
வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்.

தொடர்பு இல.: DVP/02/04/RN/467.
நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு
வசதிகள் அபிவிருத்தி அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2023, மாச்சு 29.

EOG 04-0199


1A – G 39409 – 08 (2023/04)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகிய நான், குறித்த சபைக்கு, மாத்தறை கட்டம் V ஆம் நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் கடுவன்கொட நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மேலதிக காணிப்பகுதி தேவைப்படுவதனால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக்கொள்ளும் கட்டளையினுடாக அனுமதிக்கின்றேன்.*

**ஜீவன் தொண்டமான்,**
*நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு*
*வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்.*

தொடர்பு இல.: DVP/02/02/MH/531.
*நீர் வழங்கல் அமைச்சு,*
*இல. 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2023, ஏப்பிறல் 20.*

**அட்டவணை**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாலிம்பட பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 350 ஏ - கடுவன்கொட கிராம அலுவலர் பிரிவில் கடுவன்கொட கிராமத்தில் அமைந்துள்ள "கடுவலகேவத்த மற்றும் புஞ்சிலமாஹாமிலாகே கொரடுவ", என்றழைக்கப்படுகின்ற காணிப்பகுதியிலிருந்து பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள 80 பேர்ச் விஸ்தீரணத்தையுடைய காணிப்பகுதி.

வடக்கு : திட்டப்பட இலக்கம் மார 2774 இன் துண்டு இலக்கம் 01 ;
கிழக்கு : திட்டப்பட இலக்கம் மார 2774 இன் துண்டு இலக்கம் 01 ;
தெற்கு : வீதி ;
மேற்கு : திரு. யூ. ஏ. கருணாதாச அவர்கள் உரிமை கோரும் இஹலகேவத்த காணிப்பகுதி மற்றும் வீதி ;

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* திரு. பலிகஹவடன மற்றும் திரு. டி.சி. பலிகஹவடன, பங்கலாவ, மாலிம்பட வீதி, கத்துவ, தெலிஜ்ஜவில.

EOG 04-0200

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.